முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1273

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

25.03.2023, சனிக்கிழமை

1. அறமெனும் சக்தியாய் கலியுகம் தன்னில் அற்புதம் நடத்துகின்ற அரங்கா வாழ்க
   வரம்தந்து சுப்ரமணியர் யானும்இனிதே வழங்குவேன் அரங்கன் உமக்கு ஞான அறிவுரைஆசி
   ஆசியதும் சுபகிருது சேல் திங்களில் உரைப்பேன்
   (சுபகிருது வருடம் பங்குனி மாதம் 11 ம் நாள், 25.03.2023, சனிக்கிழமை)
   அரங்கன் சக்தி இன்னும் உயர்ந்து உலக மாற்றம் நிகழ
2. நிகழவே அரங்கனின் தர்மம்
   நிலவுலகை மாற்றுவது உறுதி
   ஜெகத்தோர் அரங்கனின் திருவடி பணிந்து
   சித்தி வேண்டி தொடர்ந்து ஓங்காரக்குடில் நோக்கி வர
3. வருகவே இந்த மாற்றம் நிகழும்
   வையகமெல்லாம் அரங்கன் புகழ் பரவ
   தருகின்ற குணங்களாக மக்களிடை
   தயவுநெறி தானாக தன்னார்வ தொண்டாகப் பெருகி
4. பெருகியே உலகோர்க்கு இனிதே
   பிரணவ சித்தியும் சக்தியும்
   பேராசான் அரங்கன்வழி கிட்டும் என்கின்ற
   உறுதியும் மனபலமும் உயர்வான சரணாகதியும்
5. மிகுந்துமே இனிதே உலகமெல்லாம்
   மேலான முருகப்பெருமான் என் வழிபாட்டோடு
   காலமெல்லாம் அரங்கன் வழிவரும் மக்களுக்கு
   கடைதேற்றம் உறுதி என்கின்ற நம்பிக்கை சக்தி பெருகி
6. பெருகியே உலகம் ஞானவான்கள் நிறைந்த
   பிரபஞ்சமே ஞானிகள் ஆளக்கூடிய காலமாக
   அரங்கமகான் அவதார நோக்கமுமாக
   அகிலத்தில் மாற்றம் நிகழக்கூடும்
7. கூடவே ஞானியர்கள் படைகளும்
   குரு அரங்கனை அலங்கரித்து உதவி செய்ய
   நாடெங்கிலும் உள்ள மகா சக்திகளும்
   ஞானவானைத்தேடி அரங்கன் குடில் நோக்கி வந்து ஆற்றல் தந்து வர
8. வருகவே உலகோர் வந்திணைந்தால் போதும்
   வையகத்தில் ஓங்காரக்குடிலால் மாற்றம்
   பெருமைபட சடுதி இனிதே நடந்தேறும்
   புகன்றிய ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–